தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உணவு பதப்படுத்தல் பயிற்சி முகாம்**

**காரியாபட்டி,**

விருதுநகர் மாவட்டம் கோவிலாங்குளத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தின் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் தொழில் முனைவோருக்கு உணவு பதப்படுத்தும் இலவச பயிற்சி நடந்தது. சப்போட்டா பழத்தில் இருந்து ஐஸ்கிரீம் மற்றும் பழச்சாறு, மசாலா வகைகள் தயாரித்தல், சிறுதானியத்தில் இருந்து துரித உணவு வகைகள் தயாரித்தல், கொய்யாப்பழ பதார்த்தங்கள் தயாரித்தல் போன்ற பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன. வங்கிகளில் கடனுதவி பெறுதல் மற்றும் பல்வேறு அரசுத்துறை திட்டங்கள் குறித்து காதி, வேளாண்மை விற்பனை, நபார்டு மற்றும் மத்திய சிறு மற்றும் குறு தொழில் வளர்ச்சி அமைப்பகம் போன்ற நிறுவன அதிகாரிகள் விளக்கினர். உணவு பாதுகாப்புத்துறை சார்ந்த அதிகாரிகள் உணவு பதப்படுத்துதலில் உள்ள சட்ட நடைமுறைகள் மற்றும் பதிவு சான்றிதழ் பற்றி விளக்கமளித்தனர். மண்டல ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் பால்பாண்டி வரவேற்றார். மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் சின்னுச்சாமி தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குநர் சுப்பையா, கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) செண்பகராஜ் வாழ்த்தி பேசினர். ஒருங்கிணைப்பாளர் வீரணன் அருண்கிரிதாரி நன்றி கூறினார்.

**கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலை உயர்வு**

**பல்லடம்,**

திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.64 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் செவ்வாய்க்கிழமை கொள்முதல் விலை கிலோ ரூ.66 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**செயற்கை முறையில் பொறிக்கப்பட்டு கோடியக்கரை கடலில் விடப்பட்ட 190 ஆலிவ் ரிட்லி ஆமை குஞ்சுகள்**

**வேதாரண்யம்,**

நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்துள்ள கோடியக்கரையில் செயற்கை முறை பொறிப்பகத்தில் பொறிக்கப்பட்ட ஆலிவ் ரிட்லி என்ற அரியவகை கடல் ஆமை இனத்தின் 190 குஞ்சுகள் செவ்வாய்க்கிழமை கடலில் விடப்பட்டன.

இந்த ஆமை இனம் டிசம்பர் முதல் ஏப்ரல் வரையிலான காலங்களில் இனப் பெருக்கத்துக்காக கோடியக்கரை உள்ளிட்ட தமிழகக் கடலோரப் பகுதிக்கு வந்து முட்டையிடுகிறது. கடற்கரை மணல் பரப்பில் குழிதோண்டி இடப்படும் முட்டைகள், சுமார் 41 நாள்களுக்குப் பிறகு இயற்கையாக பொறிந்து குஞ்சுகள் வெளியேறி கடலுக்குள் சென்றுவிடும்.

ஓநாய், நரி போன்ற விலங்குகளாலும், சமூகவிரோதிகளாலும் முட்டைகள் சேதமாக்கப்படுவதைக் கருத்தில்கொண்டு, செயற்கை முறையில் குஞ்சுகளை பொறிக்கச் செய்து கடல் ஆமை இனங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கோடியக்கரை வனப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை முறை பொறிப்பகத்தில் நிகழாண்டில், சேகரிக்கப்பட்ட முட்டைகளில் இருந்து முதல் கட்டமாக 190 ஆமை குஞ்சுகள் செவ்வாய்க்கிழமை வெளிவந்தன. இந்தக் குஞ்சுகள் அனைத்தும் கோடியக்கரை வனச்சரக அலுவலர் கோபிநாத் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை காலை கடலில் விடப்பட்டன.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 49.71 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 49.71 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி.

அணைக்கு விநாடிக்கு 779 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 100 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 4.36 டி.எம்.சி.

**ராசிபுரம் கூட்டுறவுச் சங்கத்துக்கு பருத்தி வரத்து அதிகரிப்பு**

**ராசிபுரம்,**

ராசிபுரம் வேளாண்மை உற்பத்தி கூட்டுறவு விற்பனையாளர்கள் சங்கத்துக்கு பருத்தி வரத்து அதிகரித்துள்ளது. அங்கு திங்கள்கிழமை ஒரு கோடியே 70 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது.

ராசிபுரம் வேளாண்மைக் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) சார்பில், ராசிபுரம் அருகே உள்ள கவுண்டம்பாளையம் கிடங்கில் பருத்தி ஏலம் ரகசிய டெண்டர் முறையில் நடைபெற்றது. நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பருத்தி விவசாயிகள் மட்டுமன்றி, சேலம், திருச்சி, பெரம்பலூர் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளும் பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இவற்றை ஏலம் எடுக்க பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள், நூற்பு ஆலையினர் வந்திருந்தனர். இங்கு திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு மொத்தம் 9,621 பருத்தி மூட்டைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. இதில், டி.சி.எச். ரகம் குறைந்தபட்சம் ரூ.6,689-க்கும், அதிகபட்சமாக ரூ.7,399-க்கும் விற்பனையானது. ஆர்.சி.எச். ரகம் குறைந்தபட்சம் ரூ.4,619-க்கும், அதிகபட்சமாக ரூ.5,160-க்கும் ஏலம் போனது. ஒரே நாளில் ஒரு கோடியே 70 லட்சத்துக்கு பருத்தி ஏலம் போனது.

**முட்டை விலை**

**நாமக்கல்,**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.05, சென்னையில் ரூ.3.55. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.64, முட்டைக்கோழி கிலோ ரூ.45.

**மேட்டூர் அணையில் இருந்து  தண்ணீர் திறப்பு குறைப்பு**

**மேட்டூர்,**

மேட்டூர் அணையிலிருந்து குடிநீருக்கு திறந்துவிடும் நீரின் அளவு திங்கள்கிழமை நொடிக்கு 500 கன அடியாகக் குறைக்கப்பட்டது. மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் நிறந்துவிடுவது நிறுத்தப்பட்ட பிறகு குடிநீர்த் தேவைக்கு தண்ணீர் திறந்துவிடுவது வழக்கம். கடந்த இரண்டு மாதங்களாக சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவைக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை வரை குடிநீர்த் தேவைக்கு நொடிக்கு 1,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. திங்கள்கிழமை காலை முதல் குடிநீர்த் தேவைக்கு திறந்துவிடப்படும் நீரின் அளவு நொடிக்கு 500 கன அடியாகக் குறைக்கப்பட்டது. திங்கள்கிழமை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 49.34 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 454 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 17.39 டி.எம்.சி.யாக இருந்தது.

**விதை விற்பனை நிலையங்களில்  விதைச் சான்று இயக்குநர் ஆய்வு**

**விழுப்புரம்,**

விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் செயல்பட்டு வரும் அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் விதை ஆய்வு இணை இயக்குநர் கோ.செ்ந்திரம் ஆய்வு செய்தார். இவர் விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் செயல்பட்டு வரும் அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்கள், விதை சுத்திகரிப்பு நிலையங்கள், விதை பரிசோதனை நிலையங்கள் மற்றும் விதைச் சான்றுத் துறையில் பதிவு செய்யப்பட்ட விதைப் பண்ணைகள் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

விதை விற்பனை நிலையங்களில் உரிமங்களை விவசாயிகளின் பார்வையில் படும்படியாக வைக்க வேண்டும், விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காய்கறி விதைப் பாக்கெட்டுகளில் விதைச்சட்டம் 1966-ல் குறிப்பிடப்பட்ட அனைத்து விதிமுறைகளும் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். பதிவேடுகளை உரிய முறையில் பராமரிக்கவும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் விற்பனைப் பட்டியலில் விவசாயிகளின் கையொப்பம் கண்டிப்பாக பெறப்பட வேண்டும்.

விலைப்பட்டியலில் குவியல் எண், காலாவதி நாள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார். வெளி மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் விதை மூட்டைகளில் பொருத்தப்படும் சான்றட்டைகளின் விபரம் அடங்கிய படிவம் பெற்று ஆய்வுக்கு காண்பிக்க அறிவுரை வழங்கினார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கறிவேப்பிலை விஷயம்**



வெப்ப மண்டலப் பயிர்களில் கறிவேப்பிலையும் ஒன்றாகும். இதில் இரண்டு ரகங்கள் உள்ளன. நாட்டுக் கறிவேப்பிலை, காட்டுக் கறிவேப்பிலை என்பன அவை ஆகும். நாட்டுக் கறிவேப்பிலையே உணவுப் பதார்த்தங்களில் பயன்படுத்தப்படுகிறது. இதன் இலை இனிப்பும், துவர்ப்பும், நறுமணமும் கொண்டுள்ளது. காய்கறிகளோ, ரசமோ இதன் தாளிதம் இன்றி மணம் பெறுவதில்லை. "கறிவேப்பிலையோ வேப்பிலை; காய்கறிக்கெல்லாம் தாய்ப்பிள்ளை' என்பது பழமொழி. விவசாய முறையில் கறிவேப்பிலைச் செடியை எளிதாக வீட்டுத் தோட்டங்களிலும் பயிரிடலாம். எந்த மண்ணிலும் இது வளமாக வளரக்கூடியது. தொடக்கத்தில் இது ஒரு செடி போன்று தோன்றினாலும்,

நாளாவட்டத்தில் ஒரு மரமாகவே மாறி விடும். இது ஆள் உயரத்திற்கு வளர்ந்ததும், அவ்வப்போது "கவாத்து' செய்து கொண்டே இருக்க வேண்டும். கவாத்து என்பது, இது மேலோட்டமாக வளர வளர வெட்டி விட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இல்லை என்றால், பல மடங்கு உயரத்திற்கு வளர்ந்து கொண்டே செல்லும். அவ்வாறு அதிகமான உயரத்திற்கு இது சென்று விட்டால், இலைகளைப் பறிப்பது அதிக கஷ்டமாகி விடும்.

ஆனால், விவசாய வியாபார நோக்கத்தில் கிராமங்களில் வளர்க்கப்படும் இந்தத் தாவரத்தின் மேலோட்டமான கிளைகளை மிகக் கவனமாகப் பார்த்து அவ்வப்போது கண்காணித்து, கவாத்து செய்து, இது படர்ந்து விரிந்து செல்ல வல்ல தன்மையிலும் இலைகளுடன் கூடிய ஈர்க்குகளை எளிதில் முறித்து விலையாக்கவும் இயலும். பொறுமையுடன் இந்த தாவரத்தைப் பேணிப் பாதுகாத்து வளர்த்தால் நல்ல வருமானத்தை அடையலாம். ஏன் என்றால், இது அதிகச்செலவு இல்லாமல் எளிதில் பலன் தர வல்லதாகும். கறிவேப்பிலை மரம் கரிய சாம்பல் நிறம் கொண்ட பட்டையை உடையதாகும். இலைகள் ஈர்க்கில் இரு மருங்கும் அமைந்திருக்கும். இந்த ஈர்க்கு ஏறத்தாழ 12 அங்குலம் வரை நீளம் உள்ளதாக இருக்கும். ஒரு ஈர்க்கில் 25 முதல் 30 இலைகள் உள்ளதைக் காணலாம். பூக்கள் கொத்துக் கொத்தாக கிளைகளின் நுனிகளில் இருப்பதைப் பார்க்கலாம். கறிவேப்பிலைப் பழம் மிகச் சிறிய உருண்டை வடிவத்தில் இருக்கும். இயற்கையான விவசாய முறையே கறிவேப்பிலைக்குச் சிறந்தது. மாதம் ஒருமுறை மரம் ஒன்றுக்கு ஒரு கிலோ கலப்பு உரம் இட்டு மண்ணைக் கிளறி விடுதல் நல்லது. இரண்டு நாட்களுக்கு ஒரு முறை போதிய தண்ணீர் ஊற்றி வர வேண்டும். கறிவேப்பிலையில் அடங்கியுள்ள ரசாயனத் தன்மை காரணமாக, இது சரீரத்திற்கும் பலம் தர வல்லது. பசியைத் தூண்டி விடுகின்ற ஆற்றல் இதனில் உள்ளது. சரீரச் சூட்டைத் தகுந்த முறையில் உண்டாக்கும் தன்மை இதற்கு உண்டு. பொதுவாக, இதன் இலை, ஈர்க்கு, பட்டை, காம்பு ஆகிய அனைத்துமே உணவிற்காகவும், மருந்திற்காகவும் உபயோகம் ஆகின்றன. மென்று சாப்பிடப் பயன்படும் மூலிகைகளில் இதுவும் ஒன்று என்று கோவை ஈஷா யோகா மையம் இயம்புகிறது.

**- எஸ்.நாகரத்தினம்**

**விருதுநகர்.**

## சின்ன சின்ன செய்திகள்



நானோ பயோடெக் அறிமுகப்படுத்தும் நானோ துகள்: அதிநவீன விவசாய தொழில்நுட்பம்.

கரும்பின் வளர்ச்சியை தொடர்ந்து அதிகரிக்க நானோ துகள் தெளிப்பு உதவி செய்கிறது. கரும்பு வளர வளர அதற்கேற்றாற்போல் தெளிப்பானின் உயரத்தை அதிகரித்துச் செயற்கை மழைபோல் இலைகளின் மேல் நானோ பயோ துகள்கள் தெளிக்கப்பட்டு அதிகமான மகசூல் பெற வழிவகை செய்கிறது. பயிருக்குத் தேவையான பேரூட்டச்சத்துக்கள் மற்றும் நுண்ணுட்டச்சத்துக்களை இலைவழி மற்றும் வேர்களின் மூலம் செடிகளை அடைய செய்து, அதன் மூலம் ஒளிச்சேர்க்கையை மேம்படுத்துவதன் மூலம் அதிகமான வகை திறன் மற்றும் பலவிதமான நோய் மற்றும் வைரஸ் எதிர்ப்பு சக்தியைப் பயிர் அடைகிறது. முழுமையாக ஆர்கானிக் முறையில் விவசாயம் செய்பவர்களுக்கும், அதிக மகசூல் எடுக்க இந்த தொழில்நுட்பம் வழி செய்கிறது. தொழிற்சாலை கழிவுகளால் கெட்டுப்போன உபயோகப்படுத்த தகுதியிழந்த மண்ணை சாகுபடிக்கு ஏற்றதாக மாற்றுவதற்கு இந்த அதிநவீன தொழில்நுட்பம் வகை செய்கிறது. மேலும் விபரங்களுக்கு: புரபசர் ராஜசேகர், செல்: 93809 54559.

நிலக்கடலை சாகுபடி: நல்ல விளைச்சல் எடுக்க வேண்டுமானால் அந்தந்த பகுதிக்கு ஏற்ற ரகங்களை தேர்வு செய்து விதைக்க வேண்டும். திண்டிவனம் -13 ரகத்தில் சிகப்பு வண்ணப்பருப்பு இருக்கும். இது அதிக எண்ணெய்ச்சத்து கொண்டது.

திண்டிவனம் -7 ரகம் விவசாயிகள் மத்தியில் பிரபலமாக உள்ளது. இது மானாவாரி, இறவை என இரண்டு சாகுபடிக்கும் ஏற்றது. விருத்தாசலம்-2 ரகம் பெரிய பருப்பு கொண்டது. ஏற்றுமதிக்கு ஏற்ற ரகம். விருத்தாசலம் -6 ரகம் சிறிய பருப்பாக இருந்தாலும் எண்ணெய் சத்து அதிகம் கொண்டது. சாப்பிடவும் ஏற்றது. விதைகள் வாங்க பேராசிரியர் மற்றும் தலைவர், எண்ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம் க.O.

**த.வே.ப.கழக விதைகள் விற்பனைக்கு:**

*பயிர் - இரகம் - இருப்பு (கிலோ) - கிடைக்கும் இடம்*

பாசிப்பயறு - கோ.6 - 195 - வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கின்னிகுளம் - 628 252., தூத்துக்குடி மாவட்டம். போன்: 04630 261226

- வம்பன் - 4 - வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கின்னிகுளம் - 628252., தூத்துக்குடி மாவட்டம். போன்: 04630 261 226

- - 575 - பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், வைகை அணை - 625 512. போன்: 04546 - 292615

- வி.ஆர்.எம். - 266 - பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம் - 632104. போன்: 0416 - 2272221

- கோ.7 - 106 - பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி - 628 501. போன்: 04632 - 220 533./ வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார் நகர் - 642 101. போன்: 04253 -288722 உளுந்து - ஆடுதுறை.5 - 75 - பேராசிரியர் மற்றும் தலைவர், மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை - 626 107. போன்: 04566 - 220 562

- - 363 - பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், வைகை அணை - 625512. போன்: 04546 - 292615.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## அபூர்வ ஆமைக்குஞ்சுகள் கடலில் விடும் பணி தீவிரம்



**வேதாரண்யம்**: அழியும் நிலையில் உள்ள அபூர்வ இன, 'ஆலிவ்ரெட்லி' ஆமைக்குஞ்சுகளை, கோடியக்கரை கடலில், வனத்துறையினர் பாதுகாப்பாக விடத்துவங்கி உள்ளனர்.

நாகை மாவட்டம், கோடியக்கரையில், வனத்துறை சார்பில், ஆமைக்குஞ்சு பொரிப்பகம் இயங்கி வருகிறது. ஜனவரி முதல் மார்ச் வரை, ஆழ்கடல் பகுதியில் இருந்து, நாகை மாவட்ட கடற்கரை பகுதிக்கு வரும், ஆலிவ்ரெட்லி ஆமைகள், முட்டை இடுகின்றன. இவற்றை, இந்த மையம் சேமித்து பாதுகாக்கிறது. இந்த ஆண்டு, இதுவரை, 8,000 ஆமை முட்டைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை, 45 முதல் 55 நாட்களுக்குள் குஞ்சாக பொரித்ததும், கடலுக்குள் பாதுகாப்பாக விட்டு, இனவிருத்தி செய்யப்படுகின்றன. பொரிப்பகத்தில் இருந்து, 250 ஆமைக்குஞ்சுகளை, கோடியக்கரை கடலில், நேற்று காலை, 9:30 மணிக்கு, வனத்துறையினர் விட்டனர். வனத்துறையினர் கூறுகையில், 'கோடியக்கரையில் ஆமைக்குஞ்சு பொரிப்பகம் மூலம், இதுவரை, 1,000 ஆமைக்குஞ்சுகள் கடலில் விடப்பட்டுள்ளன. மீதமுள்ள, 7,000 முட்டைகளில் குஞ்சு பொரித்தவுடன், கடலில் பத்திரமாக விடப்படும்' என்றனர்.

## கோடை மழை பெய்யுமா; தமிழகத்தை நனைக்குமா?

கோடை காலத்தில், தமிழகத்தின் கடலோர பகுதிகளில், குறைந்த அளவும், உள் பகுதிகளில் அதிகளவும், மழைக்கு வாய்ப்பு இருப்பதாக, வானிலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தமிழகத்தை பொறுத்தவரை, கடந்த ஆண்டில், தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை சொல்லிக் கொள்ளும் அளவிற்கு இல்லை. வடகிழக்கு பருவ மழை காலத்தில், டெல்டா பகுதிகள், சில வடமாவட்டங்கள் மட்டுமே மழையை பெற்றன. சென்னை உள்ளிட்ட பகுதிகளில், துவக்கத்தில். சில நாட்கள் மட்டுமே மழை இருந்தது. புயல் சின்னம், புயல்கள் உருவாகி, அவை, ஆந்திராவை நோக்கி சென்றதால், ஏமாற்றமே மிஞ்சியது. தொடர்ந்து, இந்த ஆண்டு ஜனவரி முதல், மார்ச் வரை சில நேரம் மழை இருக்கலாம் என, கூறப்பட்டாலும், இரவு முதல் அதிகாலை வரை பனியும், பகல் நேரத்தில் கொளுத்தும் வெயிலும் தான் நிலவுகிறது. கடந்த சில தினங்களுக்கு முன், மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய

பகுதிகள் மற்றும் தென் மாவட்டங்களில், சில பகுதிகள், மழையை பெற்றன. சென்னை உள்ளிட்ட, வட மாவட்டங்களில், சில பகுதிகளில், லேசான தூறல் மட்டுமே கிடைத்தது. பொதுவாக, ஏப்ரல் முதல், கோடை வெயில் துவங்கி விடும். ஏற்கனவே போதுமான மழை கிடைக்காத நிலையில், குடிநீர் பிரச்னை, கோடை வெப்பம் இவற்றை பற்றிய பேச்சு தற்போதே எழுந்துவிட்டது. கோடை மழை, ஒரு வேளை கைகொடுத்தால், நிலத்தடி நீரை ஓரளவுக்கு சேமிக்கலாம் என்ற பேச்சும் எழுந்துள்ளது.

இதுகுறித்து, வானிலை ஆய்வுமைய அதிகாரி ஒருவர் கூறியதாவது: கோடை மழையை பொறுத்த வரை, தமிழகத்தில், 10 செ.மீ., வரை, மழை கொடுக்கும். அதுவும், தமிழகத்தின் உள்பகுதிகளில் மட்டுமே. கடலோர மாவட்டங்களில், மழை குறைவாகவே பெய்யும். சேலம், கோவை உள்ளிட்ட மாவட்டங்கள், கோடை மழையால் பயன் பெறும். மற்றபடி, பருவமழை பொய்க்கலாம்; கோடை வெப்பம் பொய்க்காது. இவ்வாறு, அவர் கூறினார்.

## கிருஷ்ணா நதி நீர் மீண்டும் கிடைக்கும்: பொதுப்பணித்துறை அதிகாரிகள் நம்பிக்கை

**திருவள்ளூர்**: 'நிறுத்தப்பட்ட கிருஷ்ணா நதி நீர், இன்னும், 15 நாட்களில் மீண்டும் தமிழகத்திற்கு கிடைக்கும்' என, தமிழக பொதுப்பணி துறை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆந்திர மாநிலம், கண்டலேறு அணையில் இருந்து, ஜன., 13ம் தேதி, திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர், கடந்த, 5ம் தேதி, நிறுத்தப்பட்டது. பூண்டி நீர்த்தேக்கத்திற்கு, தண்ணீர் வரத்து நின்றது. இதனால், சென்னை நகருக்கு, கோடையில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. பூண்டி நீர்த்தேக்கத்தில், நேற்றைய நிலவரப்படி, 433 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. சென்னை நகரின் குடிநீர் தேவைக்காக, வினாடிக்கு, 410 அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு, இதே நாளில், 807 மில்லியன் கன அடி தண்ணீர் இருந்தது. இதுகுறித்து, பொதுப்பணி துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: கண்டலேறு அணையில் இருந்து, ஜனவரி முதல், கடந்த, 5ம் தேதி வரை, 1.83 டி.எம்.சி., தண்ணீர் கிடைத்து உள்ளது. கண்டலேறு அணையில் இருந்து, 'ஜீரோ பாயின்ட்' வரை, தண்ணீர் வரும் பகுதியில், விவசாய பணிகள்

முடிந்து விட்டதால், தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டு விட்டது. இன்னும், 15 தினங்களில், மீண்டும் விவசாய பணிகளுக்காக, கண்டலேறு அணையில் இருந்து, தண்ணீர் திறக்கப்பட உள்ளது. அப்போது, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு, தொடர்ந்து தண்ணீர் கிடைக்கும். இவ்வாறு, அவர் கூறினார்.

## பருத்தி வார சந்தைக்கு வரத்து அதிகரிப்பு

**கள்ளக்குறிச்சி :** கள்ளக்குறிச்சியில் இன்று நடக்கவுள்ள பருத்தி வார சந்தைக்கு பருத்தி மூட்டைகளை வியாபாரிகள் அதிகளவில் கொண்டு வரத்துவங்கியுள்ளனர். கள்ளக்குறிச்சியில் கோடிக்கணக்கில் வணிகம் நடைபெறும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் பருத்தி வார சந்தை இன்று நடக்கிறது. இதற்கு விழுப்புரம், சேலம், கடலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து நேற்று அதிக விவசாயிகள் ஆயிரக்கணக்கில் பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். திண்டுக்கல், தேனி, திருப்பூர், சேலம், கோயம்புத்தூர், வேலூர், விழுப்புரம் பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். எல்.ஆர்.ஏ.. பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம் ரூ.5,256, குறைந்தபட்சம் ரூ.4,810க்கும், சுவீன் பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம் ரூ.7,197, குறைந்தபட்சம் ரூ.6,800க்கும் விலை போகிறது. இதனால் இங்கு கோடிக்கணக்கிலான பருத்தி வணிகம் நடைபெறுவதால் விவசாயிகள் வியாபாரத்திற்காக பருத்தி மூட்டைகளை வண்டிகளில் ஏற்றி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு கொண்டு வரத்துவங்கியுள்ளனர்.

## வரத்து குறைவால் தக்காளி விலை உயர்வு

**கிணத்துக்கடவு:** கிணத்துக்கடவு பகுதிகளில் தக்காளி செடிகளில் காய்ப்புத்திறன் குறைந்துள்ளதால், குறைவான தக்காளிகளை விவசாயிகள் மார்க்கெட்டுக்கு

கொண்டு வந்தனர். ஏலத்தில், கேரளா மற்றும் உள்ளூர் வியாபாரிகளுக்குள் போட்டி ஏற்பட்டது. 15 கிலோ எடை கொண்ட தக்காளி பெட்டி 60 ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த வாரம் இது 40 ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த வாரத்தை காட்டிலும், தக்காளி வரத்து வெகுவாக குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### முருங்கை விலை கடும் வீழ்ச்சி

**பொங்கலூர்**: முருங்கை சீசன் களை கட்டியுள்ளதால், விலை கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.முருங்கையை, விவசாயிகள், தனிப்பயிராகவும், ஊடுபயிராகவும் பயிரிட்டுள்ளனர். நீண்டநாள் பயனளிக்கும் மர முருங்கை, குறுகிய கால பயிரான செடி முருங்கை என இரண்டு வகைகள் உள்ளன. தற்போது, அனைத்து வகை முருங்கை மரங்களிலும், காய்கள் கொத்துக்கொத்தாக காய்த்துள்ளன.தேவையை விட விளைச்சல் அதிகமாக உள்ளதால், கடந்த மாதம் மூன்று ரூபாய் வரை விற்பனையான ஒரு காய், தற்போது, நெட்டை ஒரு ரூபாய்க்கும், குட்டை ஐம்பது காசுகளுக்கும் விற்பனையாகிறது. முதல் தர காய் மட்டுமே மார்க்கெட்டில் விலை போகிறது. சற்று தரம் குறைந்த முருங்கையை கேட்க ஆளில்லை. வெளியூர் வியாபா ரிகள், கிலோ ஆறு ரூபாய்க்கு கொள்முதல் செய்கின்றனர்.

### கோரை புல் விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம்

**கரூர்**: கரூர் மாவட்ட கோரை புல் விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம், முன்னாள் பஞ்சாயத்து தலைவர் சின்னதுரை தலைமையில், நெரூரில் நடந்தது. கூட்டத்தில், 54 அங்குலம் கொண்ட கோரை புல் கட்டு ஒன்றுக்கு, 1,500 ரூபாயும், 50 அங்குலம் கொண்ட கட்டுக்கு, 1,400 ரூபாயும், மார்பளவு கொண்ட கட்டுக்கு, 850 ரூபாயும் தரும் வகையில் பாய் உற்பத்தியாளர்கள் விலையை நிர்ணயம் செய்ய முன் வரவேண்டும். விலை நிர்ணயம் குறித்து, அடுத்த வாரத்தில் வியாபாரிகள், பாய் உற்பத்தியாளர்கள் மற்றும் கோரை புல் விவசாயிகளிடையே முத்தரப்பு ஆலோசனை கூட்டம் நடத்துவது, தீர்வு காணும் வரையில் கோரை புல்

அறுவடையை நிறுத்தி வைப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாஜி பஞ்.,தலைவர் பெரியசாமி, சுப்பிரமணியம், ராமசாமி, சுப்பிரமணி உள்பட,200 க்கும் மேற்பட்ட கோரை புல் விவசாயிகள் பங்கேற்றனர்.

## கீழ்பவானி கால்வாயில் கான்கிரீட் தளம் அமைக்க விவசாயிகள் திடீர் கோரிக்கை

**கரூர்**: "கீழ்பவானி பாசன திட்ட கால்வாயில், கான்கிரீட் தளம் அமைத்து, கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, எல்.பி.பி., ஆயக் கட்டு விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி தாலுகாவில், 4,000 ஏக்கரில் கீழ்பவானி பாசன திட்டத்தின் கீழ் விவசாயம் நடந்து வருகிறது. நன்செய் பாசனத்துக்கு ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம், 15ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டு, டிசம்பர் மாதம் 15ம் தேதி நிறுத்தப்படும். இந்த, 120 நாட்களுக்குள் விவசாயிகள் நாற்று நட்டு, சாகுபடி செய்ய வேண்டும். ஆனால், தண்ணீர் திறக்கப்பட்டு, 60 நாட்கள் ஆனாலும், தண்ணீர் வருவது இல்லை. இதற்கு, கால்வாயில் ஏற்பட்டுள்ள நீர்கசிவே காரணம் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: கடந்தாண்டு ஆகஸ்ட், 23ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. ஆனால், கடைமடை பகுதிக்கு தண்ணீர் வராத காரணத்தால் விவசாய பணிகள் துவக்கப்படவில்லை. 2,300 கன அடிக்கு பதிலாக, 2,560 கன அடி தண்ணீர் திறந்தும் தண்ணீர் வரவில்லை. இந்நிலையில், பேராசிரியர் மோகன கிருஷ்ணன் குழு, பிரதான கால்வாயில், 52 சதவீதம் முதல் 59 சதவீதம் வரை நீர் கசிவு ஏற்படுவதாக அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது. தமிழக அரசு கீழ்பவானி கால்வாயை 1,200 கோடி ரூபாய் செலவில் நவீனப் படுத்த திட்டம் அறிவித்துள்ளது. ஆனால், இந்த திட்டத்தை சிலர் முடக்க முயற்சி செய்து வருகின்றனர். வரும் காலத்தில் காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பின்படி, கீழ்பவானி பாசன திட்டத்துக்கு, 8 டி.எம்.சி., தண்ணீர் குறைக்கப்பட்டு விடும்.

இதனால், நீர் கசிவு ஏற்படும் நிலையில் கால்வாய் மேலும் வரண்டு விடும். எனவே, கீழ்பவானி பிரதான கால்வாயில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியை தமிழக அரசு துவக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## கால்நடை ஏலம் ஒத்திவைப்பு

**தஞ்சாவூர்:** "தஞ்சை அடுத்த ஈச்சங்கோட்டையில், உயரின கால்நடை பெருக்கு பண்ணையில், வரும் 20ம் தேதி கால்நடை ஏலம் விடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த ஏலம் தற்போது மறுதேதியின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது' என, பண்ணை நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உயரின கால்நடை பெருக்கு பண்ணையில் கால்நடைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இங்கு, அவ்வப்போது கால்நடைகள் பொது ஏலம் விடப்படுவது வழக்கம். அதன்படி, இம்மாதம் 20ம் தேதி கால்நடைகள் ஏலம் நடத்தப்படும் என பண்ணை நிர்வாகம் சார்பில் ஏற்னவே அறிவிக்கப்பட்டு இருந்தது. "இந்த ஏலம் 20ம் தேதியன்று நடைபெறாது. மறுதேதியின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது' என, ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப்பண்ணை நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தக்காளி, வெங்காயம் விலை 'ருசி'க்குது

மதுரை மாட்டுத்தாவணி காய்கறி மார்க்கெட்டில், முட்டைக்கோஸ், தக்காளி, வெங்காயம் விலை குறைவாகவே உள்ளது. சங்கத் தலைவர் பி.எஸ்.முருகன் கூறியதாவது: நேற்று ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ. 10 முதல் 15, தக்காளி 3 முதல் 5, கேரட் 15, பீன்ஸ் 40, முட்டைக்கோஸ் 6, டர்னிப் 20, காலிபிளவர் 10 முதல் 15, வெண்டைக்காய் 20, கீரை 10, முருங்கைக்காய் 20, புடலங்காய் 12, பூசணிக்காய் 8, கறிவேப்பிலை 30, கொத்தமல்லி 12, புதினா 10, இஞ்சி 70 முதல் 80, பச்சை மிளகாய் 12. பட்டர் பீன்ஸ் 80 முதல் 90, சோயாபீன்ஸ் 40 முதல் 50, சுரைக்காய் 7,

பீர்க்கங்காய் 15, பச்சைப் பட்டாணி 30, பாகற்காய் பெரியது 20, சிறியது 30, பல்லாரி 10 முதல் 12, சின்ன வெங்காயம் 10 முதல் 15, கருணைக் கிழங்கு 35, சேனைக்கிழங்கு 15, சேம்பு 30, முள்ளங்கி 14, உருளைக்கிழங்கு 15 முதல் 20க்கு விற்பனையானது. பொதுவாக முட்டைக்கோஸ், தக்காளி, வெங்காயம் போன்றவை சில வாரங்களாக குறைந்த விலைக்கு விற்றது. இந்நிலை ஒரு மாதம் வரை நீடிக்க வாய்ப்புள்ளது, என்றார்.

## ரோஜா விலை உயர்வு ஏன்

மதுரை பூ வியாபாரிகள் சங்கத் தலைவர் சோ.ராமச்சந்திரன் கூறியதாவது: மல்லிகை ஒரு கிலோ ரூ. 150, பிச்சிப்பூ 200, சம்பங்கி 250, கோழிக்கொண்டை ரூ. 50, செவ்வந்திப்பூ 80, அரளிப்பூ 50, செண்டுப்பூ 30, மெட்ராஸ் மல்லி 150 முதல் 200, கனகாம்பரம் 300, மரிக்கொழுந்து 25, பட்டன்ரோஸ் 150, சாதா ரோஜா 120க்கு விற்றது. வரத்து குறைவால், ரூ. 60 முதல் 70 வரை விற்ற கோழிக் கொண்டை விலை குறைந்தும், ரூ. 100 வரை விற்பனையாகும் சாதாரண ரோஜா ரூ. 120க்கும் விற்றது, என்றார்.

## மக்காச்சோளத்தை இருப்பு வைத்து கடன் பெறலாம்

**தேனி:** விவசாயிகள் மக்காச்சோளத்தை இருப்பு வைத்து, பொருளீட்டுக் கடன் பெறலாம், என தேனி ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகள் தெரிவித்தனர். போடி, காமராஜபுரம், மாணிக்காபுரம், சடையால்பட்டி கிராமங்களில் மக்காச்சோளம் அறுவடை நடக்கிறது. விளைச்சல் நன்றாக இருப்பதால், மக்காச்சோள வரத்து அதிகம் உள்ளது. எனவே, அறுவடை செய்த மக்காச்சோளத்தை இருப்பு வைத்து விற்றால், அதிக லாபம் கிடைக்கும். விவசாயிகள், தேனி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உள்ள உலர் களத்தை பயன்படுத்தி, மக்காச்சோளத்தை உலர வைத்து, விற்பனை கூட கிட்டங்கியில் இருப்பு வைக்கலாம். விளைபொருளை இருப்பு வைக்கும் விவசாயிகள், அதன் மதிப்பில் 75 சதவீதம், கடன் பெறலாம். இதற்கு 5 சதவீதம் வட்டி

வசூலிக்கப்படுகிறது. ஒரு விவசாயி அதிகபட்சமாக, 2 லட்சம் ரூபாய் கடன் பெறலாம். ஒழுங்குமுறை விற்பனைக்குழு அதிகாரிகள் கூறியதாவது: அதிகபட்சமாக 120 நாட்களுக்கும், சிறப்பு அனுமதியின் பேரில், 180 நாட்களுக்கும் பொருட்களை இருப்பு வைக்கலாம்.எனவே, இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கம்ப்யூட்டர் சிட்டா, அடங்கல், இருப்பிட சான்றுடன் விவசாயிகள், தேனி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், மார்க்கெட் கண்காணிப்பாளரை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கூறினர்.

**வறட்சியிலும் வாழை சாகுபடி அதிகரிப்பு; சொட்டு நீர்ப்பாசனம் செய்யும் விவசாயிகள்**

**தேனி:** தேனி மாவட்டத்தில், சொட்டு நீர்ப்பாசனத்தால், வறட்சியிலும் வாழை சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது. மாவட்டத்தில், வாழை சாகுபடி செய்வதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த மூன்றாண்டுகளாக, பருவமழை பொய்த்த நிலையிலும், வாழை சாகுபடி 6000 எக்டேரை கடந்துள்ளது. ஏற்றுமதி அதிகரிப்பால், தற்போது திசுவாழைக்கு நல்ல விலை கிடைக்கிறது. குறைந்தபட்சம் வாழைப்பழம், கிலோ 20 ரூபாய்க்கு மேல் விற்கப்படுகிறது. இன்னும் சில மாதங்களில், இதன் விலை கிலோவிற்கு 40 ரூபாய் வரை அதிகரிக்கும், என தோட்டக்கலைத்துறை விவசாயிகளை ஊக்கப்படுத்தி வருகிறது. இதனால், விவசாயிகள் வாழை சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தென்மேற்கு பருவமழை கை விட்ட நிலையிலும், சொட்டுநீர்ப் பாசனம் மூலம் சாகுபடி செய்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளில் ஒப்பிடுகையில், வாழை சாகுபடி பரப்பு நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் 10 ஆயிரம் எக்டேரிலும், வரும் மூன்று ஆண்டுகளுக்குள் 30 ஆயிரம் எக்டேரிலும் வாழை சாகுபடி செய்ய தோட்டக்கலைத்துறை திட்டமிட்டுள்ளது. வாழைப்பழத்தை மூலப்பொருளாக கொண்டும், வாழைத்தார், வாழை நாரை மூலப்பொருளாக

கொண்டும், பல்வேறு பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க திட்டமிடப்பட்டு, பணிகள் நடந்து வரும் நிலையில் இந்த இலக்கை, எட்டி, வாழை சாகுபடி செய்தால் மட்டுமே தொழிற்சாலையை முழு அளவில் இயக்க முடியும். எனவே தோட்டக்கலைத்துறை, இதற்கேற்ற நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. வாழை சாகுபடி அதிகரித்து வரும் நிலையில், மற்ற காய்கறிகளின் சாகுபடி பரப்பு குறைந்துள்ளது. கடந்த ஆண்டு 400 எக்டேராக இருந்த வெங்காயம் நடப்பு ஆண்டில், 275 எக்டேராக சரிந்து விட்டது. கடந்த ஆண்டு 275 எக்டேராக இருந்த கத்தரிக்காய் சாகுபடி, தற்போது 125 எக்டேராக குறைந்துள்ளது. வறட்சி காரணமாக, இன்னும் சில நாட்களில் தேனி மாவட்டத்தில் காய்கறி சாகுபடி பாதிப்பு ஏற்பட்டு விலைகள் உயரும், அபாயம் உள்ளதாக தோட்டக்கலைத்துறை அச்சம் தெரிவித்துள்ளது.

## ஒரே நிலத்தில் மூன்று வகை விவசாயம்; பூவந்தி விவசாயி புதிய முயற்சி

**பூவந்தி:** பூவந்தி அருகே விவசாயி ஒருவர் ஒரே நிலத்தில் மூன்று வகை பயிர்களை சாகுபடி செய்து லாபம் ஈட்ட புதிய முயற்சி மேற்கொண்டுள்ளார். பூவந்தி அருகே கட்டையம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி அய்யாவு. தனது நிலத்தில் வாழை பயிரிட்டு வந்தார். நாள் முழுவதும் வாழைக்கு தண்ணீர் வேண்டும், சாகுபடி நேரம் அதிகமாவதுடன் தண்ணீரின் தேவையும் அதிகமாகி வந்தது. இதனை குறைக்க சீசனுக்கு ஏற்றவாறு தர்ப்பூசணி செடியை பயிரிட்டுள்ளார். மூன்று மாத கால பயிரான தர்ப்பூசணி செடி நிழலில் அதிக எடையுடன் வளரும் என்பதால் நிழலுக்காக சூரியகாந்தி செடியை பயிரிட்டுள்ளார். சூரிய காந்தியும் மூன்று மாத கால பயிர் என்பதால் ஒரே நேரத்தில் மூன்று வித பயிரில் இருந்து லாபம் கிடைக்கும் என நம்புகிறார். தற்போது சூரியகாந்தியும் நன்கு விளைந்து ஒரு பூ அரை கிலோ எடை அளவில் வளர்ந்துள்ளது. சூரியகாந்தி பெரும்பாலும் ஒட்டன்சத்திரம், வேடசந்தூர் பகுதிகளில் தான் விளையும். முதன் முறையாக

வறட்சி மாவட்டமான சிவகங்கை பூவந்தி பகுதியில் விளைந்துள்ளதால் பூவந்தியை சுற்றியுள்ள அரசனூர், கிளாதரி, திருமாஞ்சோலை, பூஞ்சுத்தி பகுதி விவசாயிகள் சூரியகாந்தி, தர்ப்பூசணி, வாழை பயிரிட முடிவு செய்துள்ளனர். அய்யாவு கூறும் போது, ஒட்டன்சத்திரத்தில் கிலோ 500ரூபாய் என விதை வாங்கி ஒரு ஏக்கரில் சூரியகாந்தி நடவு செய்துள்ளேன். வாழை 12 மாத பயிர், ஆனால் சூரியகாந்தி, தர்ப்பூசணி மூன்று மாத காலப்பயிர் என்பதால் வாழை விளைச்சலுக்கு வருவதற்குள் நான்கு முறை தர்ப்பூசணி, சூரியகாந்தியை அறுவடை செய்துவிடலாம், என்றார். யாருடைய ஆலோசனையும் இன்றி ஒரு புதிய முயற்சியாக இதனை செய்து வருகிறார் அய்யாவு.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஒரு குவின்டால் மஞ்சள் விலை ரூ.7 ஆயிரத்தை தாண்டியது**



**ஈரோடு** : திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை தினமும் ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்திலும், ஈரோடு நசியனூர் ரோட்டிலுள்ள செம்மாம்பாளையம் தனியார் மஞ்சள் மார்க்கெட்டிலும் மஞ்சள் ஏலம் நடைபெறும். நேற்று மஞ்சள் மார்க்கெட்டிற்கு குறைந்தளவிலேயே மஞ்சள் மூட்டை விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. இதன் காரணமாக நேற்று தனியார் மஞ்சள் மார்க்கெட்டில் நடந்த ஏலத்தில் இந்த ஆண்டிலேயே முதன்முறையாக ரூ.7

ஆயிரத்தை தாண்டி மஞ்சள் விலை போனது. அதிகபட்சமாக விரலி ரகம் ரூ.7089க்கும், கிழங்கு மஞ்சள் ரூ.6,666க்கும் விலை போனது.

## முட்டை விலை சரிவு 305 காசுகளாக நிர்ணயம்



**நாமக்கல்**: நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்தில் முட்டை விலையில் 10 காசு குறைக்கப்பட்டது. ஒரு முட்டையின் பண்ணைகொள்முதல் விலை 305 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. கோடைக்காலம் துவங்கியுள்ளதால் தமிழகத்தில் முட்டை விற்பனை குறைந்து வருகிறது. நாட்டின் பிற மண்டலங்களிலும் முட்டை விலை தொடர்ந்து சரிந்து வருகிறது. இதனால் நாமக்கல் மண்டலத்தில் விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது. கடந்த 10 நாளில் முட்டை விலை 40 காசு வரை குறைந்துள்ளது.ஒரு கிலோ முட்டைக்கோழி ^44 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ^64 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (பைசாவில்) பெங்களூரு- 350, மைசூர்- 342, ஐதராபாத்- 330, மும்பை- 368, கொல்கத்தா- 385 டெல்லி- 340 காசுகள்.

## வடக்கில் மழை; தெற்கில் வறட்சி விளைச்சல் பாதிப்பால் புளி விலை உயர்வு



**சேலம்:** இந்தியாவில் மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் புளி விளைச்சல் அதிகம். இம்மாநிலங்களில் ஆண்டுதோறும் பிப்ரவரி, மார்ச் மாதத்தில் புளி அறுவடை செய்து, இந்தியா முழுவதும் புளி விற்பனைக்கு அனுப்புவார்கள்.

தமிழகத்தை பொறுத்தவரை கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் மாவட்டத்தில்தான் புளி அதிகம் விளைச்சல் தருகிறது. தற்போது புளி மண்டிக்கு புளி வரத்து குறைந்துள்ளதால், அதன் விலை உயர்ந்து வருகிறது. கிருஷ்ணகிரி புளி மண்டி வியாபாரிகள் கூறியதாவது:

தமிழகத்தில் மிகப்பெரிய புளி மண்டி கிருஷ்ணகிரியில்தான் உள்ளது. இங்கு வட மாநிலம் மற்றும் தமிழகத்தின் பலபகுதிகளில் இருந்து புளி வரும். நடப்பாண்டு வட மாநிலங்களில் பெய்து வரும் மழையால் புளிய மரத்தில் புளியம்பழம் விழுந்து வருகிறது.

இதனால் வட மாநிலங்களில் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் புளிய மரங்கள் அதிகளவில் வெட்டப்பட்டதாலும், வறட்சி காரணமாக புளி விளைச்சல் குறைந்துள்ளது.

கடந்தாண்டு இதே மார்ச் மாதத்தில் தினமும் சராசரியாக 20 ஆயிரம் சிப்பம்(ஒரு சிப்பம்-40 கிலோ) புளிவிற்பனைக்கு வந்தது. ஆனால் நடப்பாண்டு 10 ஆயிரம் சிப்பம் தான் விற்பனைக்கு வருகிறது.

புளி வரத்து குறைந்ததால், அதன் விலை உயர்ந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி ஒரு கிலோ கொட்டைப்புளி 25 முதல் 30 எனவும், பூ புளி 45 முதல் 55 எனவும், கரிபுளி 60 முதல் 70 எனவும், சப்பாத்தி புளி 47 முதல் 60 என விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டை காட்டிலும் நடப்பாண்டு கிலோவுக்கு 2 முதல் 3 விலை அதிகரித்துள்ளது.

இங்கு விற்பனைக்கு வரும் புளி சென்னை, மதுரை, கோவை, பொள்ளாச்சி, திருச்சி, சேலம், பாலக்காடு உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பி வருகிறோம். இவ்வாறு புளி மண்டி வியாபாரிகள் கூறினர்.

**தேர்தல் கமிஷன் கெடுபிடிகளால்**

**ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் ரூ.2 கோடி காய்கறிகள் தேக்கம்**



**ஒட்டன்சத்திரம்** : நாடாளுமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால் தமிழகம் முழுவதும் அதிகாரிகள் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் ரூ.50 ஆயிரத்திற்கு மேல் பணம் கொண்டு செல்பவர்கள் போதிய ஆவணங்கள் காட்டியாக வேண்டும். இல்லாவிட்டால் பணம் பறிமுதல் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் சேர்க்கப்படும். தமிழகம் முழுவதும் நாள்தோறும் லட்சக்கணக்கான பணம் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது.இந்த நடைமுறை காய்கறி வியாபாரிகளுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் தினமும் ரூ.2 கோடி மதிப்பிலான காய்கறிகள் வியாபாரம் நடைபெறும். இதை வாங்க தமிழக, கேரள வியாபாரிகள் வருவர். ஞாயிறு முதல் வெள்ளிக்கிழமை வரை வியாபாரம் நடைபெறும். சனிக்கிழமை மார்க்கெட் விடுமுறை. இந்த ஒரு வாரம் வாங்கிய காய்கறிகளுக்கு வியாபாரிகள் ஞாயிறு காலை பணம் வழங்க வேண்டும். இதற்காக கேரள வியாபாரிகள் அங்கு வசூலான தொகையுடன் ஒட்டன்சத்திரம் வருவர். இரண்டு தினங்களுக்கு முன்பு இரவில், கோவை மாவட்டம் பொள்ளாச்சி மடத்துக்குளம் வழியாக வரும்போது, 7 வியாபாரிகளிடம் ரூ.29 லட்சத்தை தேர்தல் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதனால் கடந்த 2 நாட்களாக ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வியாபாரிகள் வரத்து குறைந்து, ரூ.2 கோடி மதிப்பு காய்கறிகள் தேங்கின.இந்நிலையில் நேற்று காலை கேரள, தமிழக வியாபாரிகள், அதிகாரிகள் நடவடிக்கையை கண்டித்து காய்கறிகளை வாங்க மறுத்தனர். இதையடுத்து வியாபாரிகள், கமிஷன் கடைக்காரர்கள், விவசாயிகள் திண்டுக்கல்-பழநி சாலையில் மறியலில் ஈடுபட்டனர். ஒட்டன்சத்திரம் தாசில் தார் விஜயலட்சுமி,

டிஎஸ்பி ஜானகிராமன், இன்ஸ்பெக்டர் இளவரசு ஆகியோர் மறியலில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார் த்தை நடத்தினர். பணத்தை பறிமுதல் செய்யும் அதிகாரிகளின் நடவடிக்கையை தடுத்து நிறுத்த வேண்டும் என மறியலில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். அதிகாரிகள் சமரசத்தை தொடர்ந்து மறியல் வாபஸ் பெறப்பட்டது. மறியலால் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.இதையடுத்து வியாபாரிகள் சங்க தலைவர் தங்கவேல் தலைமையில் கலெக்டரை சந்தித்தனர். அவர்க ளிடம் பேச்சு வார்த்தை நடத்திய கலெக்டர் வெங்கடாசலம், கேரளாவில் கடைகளில் வசூல் செய்யும் பணத்தை கடையின் லெட் டர் பேடில் பில்போட்டு வாங்கி வந்தால் பணம் பறிமுதல் செய்யப்படாது என உறுதியளித்தார். இதையடுத்து நேற்று ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வியாபாரம் மீண்டும் துவங்கியது.

## உறைபனி, நோய் தாக்கத்தால் மகசூல் பாதிப்பு

**பசுந்தேயிலைக்கு குறைந்த மாத விலை நிர்ணயம்**



**மஞ்சூர்** : மாவட்ட கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பசுந்தேயிலைக்கு குறைவானவிலை நிர்ணயத்தால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.நீலகிரி மாவட்டத்தில் 15 கூட்டுறவு ஆலைகளும் நுஈற்றுக்கும் மேற்பட்ட தனியார் ஆலைகளும் இயங்கி வருகின்றன.இதில் கூட்டுறவு ஆலைகளில் மட்டும் சுமார் 22 ஆயிரம் சிறு,குறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களிடம் இருந்து தினமும் கொள்முதல் செய்யப்படும் பசுந்தேயிலைக்கு மாதம் ஒரு முறை குன்னுஈரில் உள்ள இன்ட்கோசர்வ் நிறுவனம் மூலம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. பின்னர் சம்பந்தப்பட்ட கூட்டுறவு ஆலை மூலம்

விவசாயிகளுக்கு அவர்கள் வினியோகித்த பசுந்தேயிலைக்கேற்ப தொகை பட்டுவாடா செய்யப்படும்.இந்நிலையில் கடந்த பிப்ரவரி மாதம் விவசாய உறுப்பினர்களிடம் இருந்து கூட்டுறவு ஆலைகளில் கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்கு மாதவிலை நிர்ணயம் செய்வது தொடர்பான கூட்டம் குன்னுூரில் உள்ள இன்ட்கோசர்வ் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்தது. இந்த கூட்டத்திற்கு இன்ட்கோ சர்வ் சேர்மன் சிவக்குமார் தலைமை தாங்கினார். இதில், கடந்த மாதத்திற்கான பசுந்தேயிலையின் மாத விலை நிர்ணயம் செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது. இதன்படி மாவட்ட கூட்டுறவு தொழிற்சாலைகளில் அதிகபட்சமாக மஞ்சூர், கூடலுூர் சாலீஸ்பரி, பந்தலுூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.13.10 மற்றும் கூடுதலாக 90 பைசா சேர்த்து ரூ.14 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள் ளது. கைகாட்டி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை யில் பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.13.10 மற்றும் கூடுதலாக 40 பைசா சேர்த்து ரூ.13.50 என நிர்ணயம் செய்யப்பட்டுள் ளது.பிக்கட்டி, குந்தா (எடக் காடு), இத்தலார், கிண்ணக்கொரை, கரும்பாலம், மகாலிங்கா, எப்பநாடு, மேற்கு நாடு, பிதர்காடு, பிராண்டியர் உள்ளிட்ட கூட்டுறவு தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.13.10 ஆகவும் மாதவிலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.கடந்த 4 மாதங்களுக்கும் மேலாக மாவட்டத்தில் கடும் பனி பொழிவு மற்றும் உறை பனியின் தாக்கத்தால் தேயிலை மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குந்தா உட்பட பல்வேறு பகுதிகளில் தேயிலை தோட்டங்களில் சிவப்பு சிலந்தி நோய் தாக்கியுள்ளது.இதனால் பசுந்தேயிலை வரத்து பல மடங்கு குறைந்து போனது. இலை வரத்து பெருமளவு குறைந்துள்ள நிலையில் பெரும்பாலான கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் கடந்த மாதங்களை விட பசுந்தேயிலைக்கு மாத விலை குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக விவசாயிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

## மீன் இனப்பெருக்கத்துக்காக செயற்கை பவளப்பாறைகள் கடலுக்குள் கொண்டு செல்லப்பட்டது

**காசிமேடு,** : நடுக்கடலில் முன்பு மணல் திட்டுகள், பவள பாறைகள் உள்ளிட்டவை அதிகளவில் இருந்தது. இவற்றில் பாசி படிந்து மீன்கள் தங்குவதற்கும், இன

பெருக்கம் செய்வதற்கும் பயன்பட்டது. நாளடைவில், படகுகள், கப்பல்கள் அதிகளவில் சென்றதால், அவை அழிந்துவிட்டது. இதனால், மீன்கள் தங்குவதற்குமுடியாமல், இனப்பெருக்கம் குறைந்தது. இதற்கு தீர்வாக, கடலில் செயற்கை பவள பாறைகளும், மீன்கள் தங்குமிடம் அமைக்கவும் மீனவர்கள் கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து, மத்திய அரசு உதவியுடன் வங்க கடல் பகுதியில் பழவேற்காடு முதல் கன்னியாகுமரி வரை செயற்கை பவள பாறைகளும், மீன்கள் தங்கும் உறைவிடமும் கடலில் நிறுவும் பணி தற்போது நடந்து வருகிறது. இதற்காக, காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் முக்கோண வடிவிலான செயற்கை மீன் உறைவிடங்கள் தயாரிக்கப்பட்டது. பணிகள் முடிந்த நிலையில், இந்த செயற்கை மீன் தங்கும் ராட்சத உறைவிடங்கள், காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கிரேன் மூலம் பெரிய விசைபடகுகளில் நேற்று கடலுக்குள் கொண்டு செல்லப்பட்டன.

அவை கடற்கரை யில் இருந்து சுமார் 10 கடல் மைலுக்கு அப்பால் கொண்டு இறக்கப்படும். இந்த செயற்கை பாறைகளில் பாசி படர்ந்து, அதன் இடுக்குகளில் மீன்கள் சென்று தங்கி, அவை இன பெருக் கம் செய்ய ஏதுவாக இருக்கும் என கூறப்படுகிறது. இதுகுறித்து மீனவர்கள் கூறுகையில், 'செயற்கை பவள பாறை, உறைவிடங்களை நிறுவுவதற்கு முன், உரிய கடல் சார்ந்த நிபுணர்களுடன் ஆய்வு செய்ய வேண்டும். அவர்கள் அளிக்கும் அறிக்கையின்படி இதை நிறுவ வேண்டும். ஆனால், அந்த நடைமுறையை கடைபிடிக்காமல், அதிகாரிகள் செயல்படுகின்றனர். அதில் எத்தனை பாறைகள் போடுகிறார்கள் என கணக்கு காட்டவில்லை. இவ்வாறு முறையில்லாமல் மீன்கள் உறைவிடங்களை செய்வதால், நடுக்கடலில் மீன்களுக்காக வலைகளை விரிக்கும்போது, இந்த பாறைகளில் வலைகள் சிக்கி அறுந்து விடும் நிலை உள்ளது. இதனால், மீனவர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்படும்.

எனவே இதுபோன்ற பணிகளை செய்யும்போது உரிய நிபுணர்களை கொ ண்டு, நன்கு ஆய்வு செய்தபின், அதற்கான அதிகாரிகள் முன்னிலையில் நிறுவ வேண்டும். கடலில் போடுவதற்கும் முறையான இடத்தை தேர்வு செய்ய வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

## குஜராத்தில் இருந்து 2500 டன் இயற்கை உரம் கொள்முதல்

**கோவை,** : ரசாயன உரங்களின் தாக்கம் தவிர்க்க, குஜராத்திலிருந்து 2,500 டன் இயற்கை உரம் நேற்று கொள்முதல் செய்யப்பட்டது. தனியார் டீலர் மூலமாக, குஜராத்திலிருந்து வடகோவை ரயில் நிலையத்திற்கு ரயில் மூலமாக 2,500 டன் இயற்கை உரம் கொள்முதல் செய்து நேற்று பெறப்பட்டது. 50 கிலோ கொண்ட உர மூட்டைகள் லாரிகள் மூலமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. வேளாண்மை துறையினர் கூறுகையில், ''இயற்கை உரங்கள் வேளாண்மை துறை மூலமாக 250 கிராம் பாக்கெட்டுகளாக மானிய விலையில் வழங்கப்படுகிறது. மூட்டை கணக்கில் இயற்கை உரம் வழங்கப்படுவதில்லை. தனியார் மூலமாக பல்வேறு மாநிலங்களில் இயற்கை உர மூட்டைகளை விவசாயிகள் பெறுகிறார்கள். 300 ரூபாய் முதல் 400 ரூபாய் வரை இயற்கை உரங்கள் விற்பனையாகிறது. 10 ஆண்டுகளுக்கு மேலாக ரசாயன உரம் பயன்படுத்தினால் மண் கெட்டு போய் விடும். இயற்கை உரத்தில் வேம்பு போன்றவை இடம் பெறும். இவை இயற்கையான பூச்சி கொல்லி மட்டுமல்ல மண்ணுக்கு தேவையான தாதுப்பொருட்களை தருகிறது. எனவே இயற்கை உரங்களை அதிகளவு பயன்படுத்தி பயன்பெறலாம் என விவசாயிகளுக்கு அறிவுறுத்தி வருகிறோம். இயற்கை உரத்தின் மூலமாக மகசூல் பல மடங்கு அதிகமாக கிடைக்கும், '' என்றனர்.

## வரத்து அதிகரித்தது ரூ.5லட்சம் நேந்திரன் வாழைத்தார் ஏலம்

**அனுப்பர்பாளையம்,** : அவினாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க ஏல மையத்தில் நேந்திரன் வாழைத்தார் ஏலம் நேற்று நடந்தது. இதில், நேந்திரன் வாழைக்காய் கிலோ ஒன்றுக்கு ரூ.15 முதல் ரூ.21 வரை விலை போனது. கதளி வாழைத்தார் வரத்து இல்லை. மொத்தம் ரூ.5லட்சத்து 10ஆயிரம் வரை ஏலம் நடந்தது. பெருமாநல்லூர், மலையப்பாளையம், கோபி, திங்களூர், பொள்ளாச்சி, அன்னூர், அவினாசி வட்டம், நம்பியூர், சேவூர், நம்பியாம்பாளையம், குன்னத்தூர், தண்டுக்காரன்பாளையம், போத்தம்பாளையம் ஆகிய பகுதியில் இருந்து 2,78 விவசாயிகள் கலந்து கொண்டனர். கடந்த வாரத்தை விட

வாழைத்தார் வரத்து அதிகரித்திருந்தது என சங்க தலைவர் சுப்ரமணியம் தெரிவித்தார்.

**ரூ.7லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்**

**அனுப்பர்பாளையம்**, : அவினாசி அருகே சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலக்கடலை ஏலம் நேற்று நடந்தது. 800 மூட்டை ஏலத்துக்கு வந்தது. அவை, ரூ.7.2லட்சத்துக்கு ஏலம் போனது. குவின்டால் ஒன்றுக்கு (காய்ந்த) முதல் ரக நிலக்கடலை ரூ.3,100 முதல் ரூ.3,320 வரை, இரண்டாம் ரகம் ரூ.2,900 முதல் ரூ.3,060 வரை விற்பனையானது. பச்சை நிலக்கடலை வரத்து இல்லை. திருச்செங்கோடு, மணப்பாறை பகுதியைச் சேர்ந்த 6 வியாபாரிகள் மற்றும் புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், மலையப்பாளையம், அவினாசிபுதூர், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசவலையபாளையம் பகுதியை சேர்ந்த 65 விவசாயிகள் பங்கேற்றனர். கடந்த வாரத்தை விட 200 மூட்டை வரத்து குறைந்தது. குவின்டாலுக்கு ரூ.150 வரை விலை அதிகரித்ததாக விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் தெரிவித்தார்.

**98,500 மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி**

**திருவாரூர்**, : திருவாரூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வரை 98 ஆயிரத்து 500 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மாவட்டத்தில் உள்ள பசு மற்றும் எருமை கால்நடைகளுக்கு 6வது சுற்றாக கோமாரி நோய் தடுப்பூசி போடும் சிறப்பு முகாம் கடந்த 1ம் தேதி முதல் நடை பெற்று வருகிறது. மத்திய அரசு மூலம் 2 லட்சம் ஊசிகள் வரப்பெற்றதில் 10ம் தேதி வரையில் 98 ஆயிரத்து 500 கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள் ளன. வரும் 21ம் தேதி வரை யில் நடைபெறும் இந்த முகா மில் மீதமுள்ள ஊசிகள் போடப்பட உள்ளன. காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும், பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரையிலும் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தடுப்பூசி

போடும் பணிகள் கிராமம் கிராமமாக நடைபெற்று வருகின்றன. எனவே கால்நடைகளை வளர்க்கும் பொது மக்கள் அனைவரும் தங்களது 4 மாதத்திற்கு மேற்பட்ட கால்நடைகள் அனைத்திற்கும் தவறாமல் தடுப்பூசி போடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

மேலும் திருவாரூர் ஒன்றியத்திற்குட்பட்ட கீழகாவாதுகுடி ஊராட்சி வட கால் கிராமத்தில் நடை பெற்ற தடுப்பூசி போடும் பணியினை நேற்று கலெக் டர் நடராஜன் ஆய்வு செய்தார். இதில் கால்நடை துறை மண்டல இணை இயக்குநர் சின்னப்பா, உதவி இயக்குநர் கள் பாலகிருஷ்ணா, தன பால், லூர்து சாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு முகாம்**



கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது. அதில் கலந்து கொண்ட மாணவிகளை படத்தில் காணலாம்.

**கோவை,**

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது. இதில் மாணவ-மாணவிகள் திரளாக பங்கேற்று உள்ளனர்.

<u>வேளாண் பல்கலைக்கழகம்</u>

கோவை வேளாண்மை பல்கலைக்கழக, மாணவர் நல இயக்ககம் சார்பில், வேலைவாய்ப்பு முகாம் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்று வருகிறது. இதில் வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண் கல்லூரி, ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தோட்டக்கலை கல்லூரிகளில் படிக்கும் இறுதி ஆண்டு மாணவர்கள் 714 பேர் பங்கேற்று உள்ளனர்.

இதன்படி கோவை, மதுரை, திருச்சி, கிள்ளிகுளம், பெரியகுளம், குமுலூர் ஆகிய இடங்களில் உள்ள வேளாண் கல்லூரிகள், மேட்டுப்பாளையத்தில் உள்ள வனவியல் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் வேலைவாய்ப்பு முகாமுக்கு வந்துள்ளனர். இதன் தொடக்கவிழாவில் வேளாண் பல்கலைக்கழக பயிர் மூலக்கூறுவியல் துறை இயக்குனர் சந்திரபாபு கலந்து கொண்டு வேலைவாய்ப்பு முகாமை தொடங்கி வைத்தார்.

<u>வேலைவாய்ப்பு முகாம்</u>

இது தொடர்பாக வேளாண் பல்கலைக்கழக மாணவர் நல இயக்ககத்தின் இயக்குனர் டாக்டர் நா.ரகுபதி கூறியதாவது:-

கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் கல்லூரிகளில் மாணவ-மாணவிகளுக்கு ஆண்டுதோறும் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி நடப்பு ஆண்டுக்கான வேலைவாய்ப்பு முகாம் தற்போது நடைபெற்று வருகிறது.

இதில் வேளாண் கல்லூரிகளில் படிக்கும் 354 மாணவ-மாணவிகளுக்கும், பல்கலைக்கழகத்தில் படிக்கும் 360 மாணவ-மாணவிகளும் என மொத்தம் 714 இளநிலை மற்றும் முதுநிலை வேளாண் படிப்பு இறுதி ஆண்டு மாணவ-மாணவிகள் பங்கேற்று உள்ளனர்.

<u>முன்னணி நிறுவனங்கள் பங்கேற்பு</u>

இந்த முகாமில் சுமார் 20 முன்னணி உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் பங்கேற்று உள்ளன. தற்போது மாணவ-மாணவிகள் தங்களுக்கு விருப்பம் உள்ள

நிறுவனங்களுக்கு தங்களது சுய விவரங்களை(பயோ டேட்டா) அளித்து உள்ளனர். அதன் அடிப்படையில், மாணவர்களை நேர்காணல் செய்வதற்கு நிறுவனங்கள் தயாராகி வருகின்றன. எழுத்துத்தேர்வு, குழு கலந்துரையாடல், நேர்காணல் என்ற 3 நிலைகளின் மூலம் மாணவ-மாணவிகள் வேலைவாய்ப்புக்கு தேர்வு செய்யப்பட உள்ளனர். இந்த முகாம் இன்று(புதன்கிழமை) தொடர்ந்து நடக்கிறது. அதன் முடிவில் எவ்வளவு மாணவ-மாணவிகள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர் என்பது தெரியவரும். கடந்த ஆண்டு நடைபெற்ற முகாமில் 223 பேர் வேலைவாய்ப்பு பெற்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**ஏப்ரல்–ஜனவரி மாத காலத்தில் வெங்காயம் ஏற்றுமதி 28% சரிவடைந்தது**



**புதுடெல்லி,**

நடப்பு நிதி ஆண்டின் ஏப்ரல்–ஜனவரி மாத காலத்தில் வெங்காயம் ஏற்றுமதி 28 சதவீதம் குறைந்து 11.08 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது. இது சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் 15.39 லட்சம் டன்னாக இருந்தது. பலத்த மழையால் சேதம் மற்றும் கையிருப்பு குறைந்ததால் சந்தைக்கு வெங்காயம் வரத்து குறைந்தது. இதன் காரணமாக கடந்த ஆண்டில் உள்நாட்டில் ஒரு கிலோ வெங்காயம் விலை ரூ.100 –ஆக உயர்ந்து இருந்தது. இதனையடுத்து மத்திய அரசு உள்நாட்டில் வெங்காய சப்ளையை அதிகரிக்கவும், விலை உயர்வை கட்டுப்படுத்தவும் வெங்காயம் ஏற்றுமதிக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தது.

**குறைந்தபட்ச விலை**

ஆகஸ்டு 14–ந் தேதி முதல் மத்திய அரசு ஏற்றுமதி செய்யப்படும் வெங்காயத்திற்கான குறைந்தபட்ச விலையை படிப்படியாக அதிகரித்தது. அதாவது அரசு நிர்ணயித்த குறைந்த பட்ச விலையை காட்டிலும் குறைந்த விலையில் வெங்காயம் ஏற்றுமதி செய்ய முடியாது. இந்நிலையில் கரீப் பருவ வெங்காயம் சந்தைக்கு வர தொடங்கியதை அடுத்து குறைந்த பட்ச ஏற்றுமதி விலையை குறைக்க தொடங்கியது. கடந்த டிசம்பர் மாதத்தில் ஏற்றுமதி செய்யப்படும் வெங்காயத்திற்கான குறைந்த பட்ச விலையை 350 டாலரிலிருந்து 150 டாலராக (1 டன்னுக்கு) குறைத்தது. இதனையடுத்து டிசம்பர் மாதத்தில் ஏற்றுமதி 1.33 லட்சம் டன்னாக அதிகரித்தது. இருப்பினும் ஜனவரி மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி 1.21 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. டிசம்பர் மாதத்தில் சர்வதேச சந்தையில் 1 டன் வெங்காயத்திற்கான விலை ரூ.18,600 உயர்ந்திருந்தது. இது ஜனவரி மாதத்தில் ரூ.9,300–ஆக குறைந்தது. இதனையடுத்து அம்மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி மதிப்பு அடிப்படையில் 55 சதவீதம் குறைந்து ரூ.248 கோடியிலிருந்து ரூ.113 கோடியாக சரிவடைந்தது. தற்போது மத்திய அரசு ஏற்றுமதி செய்யப்படும் வெங்காயத்திற்கான குறைந்தபட்ச விலையை நீக்கி உள்ளது.

**கோடியக்கரையில் 250 ஆமை குஞ்சுகள் கடலில் விடப்பட்டன**



**வேதாரண்யம்,**

வேதாரண்யத்தை அடுத்த கோடியக்கரையில் 250 ஆமைக்குஞ்சுகள் கடலில் விடப்பட்டன.

<u>ஆலிவர்ரெட்லி ஆமைகள்</u>

வேதாரண்யம் தாலுகா கோடியக்கரையில் ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை அரியவகையான ஆலிவர்ரெட்லி ஆமைகள் கடற்கரைக்கு வந்து முட்டையிட்டு செல்வது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டும் கோடியக்கரை, ஆறுகாட்டுத்துறை, புஷ்பவனம், மணியன்தீவு உள்ளிட்ட 5 இடங்களில் ஆலிவர்ரெட்லி ஆமைகள் கடற்கரைக்கு வந்து முட்டையிட்டு செல்கின்றன. இந்த முட்டைகளை வனத்துறையினர் சேகரித்து வருகின்றனர். இதுவரை வனத்துறையினரால் சுமார் 8 ஆயிரம் ஆமை முட்டைகள் சேகரிக்கப்பட்டு கோடியக்கரை ஆமை குஞ்சு பொறிப்பகத்தில் வைத்துள்ளனர். இந்த முட்டைகளில் இருந்து 45 முதல் 55 நாட்களுக்குள் குஞ்சுகள் வெளிவரும்.

<u>கடலில் விடப்பட்டது</u>

அவ்வாறு வைக்கப்பட்ட முட்டைகளில் சுமார் 250 முட்டைகள் பொறிந்து ஆமைக்குஞ்சுகளாக வெளிவந்தன. இதனை வனத்துறையினர் எடுத்து கடலில் விட்டனர். இதுவரை இந்த வருடத்தில் மட்டும் சுமார் ஆயிரம் குஞ்சுகள் கடலில் விடப்பட்டுள்ளன. அழிந்து வரும் இனமான இந்த ஆலிவர்ரெட்லி ஆமையை மீனவன் நண்பன் என்றும், கடலை தூய்மைபடுத்தும் பணியை மேற்கொள்வதாகவும் மீனவர்கள் கூறுகின்றனர். இதுகுறித்து வனத்துறையினர் கூறும் போது இவ்வாறு பல வகைகளில் மீனவர்களுக்கு உதவி செய்யும் ஆலிவர்ரெட்லி ஆமை முட்டைகளை கடற்கரையில் கண்டால் உடனே வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். ஆமை முட்டை விற்பனை செய்வது சட்டபடி குற்றமாகும். இது வனத்துறை சட்டத்தின் கீழ் 2 ஆண்டு முதல் 7 ஆண்டு வரை சிறை தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படும் என கூறினர்.

**வாழை சாகுபடியில் ஆர்வம் காட்டும் தெங்குமரஹாடா பகுதி விவசாயிகள்**

**கொலக்கம்பை, -**

தெங்குமரஹாடா கிராமத்தில் விவசாயிகள் தற்போது வாழைகள் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தெங்குமரஹாடா கிராமம்

கீழ்கோத்தகிரி ஒன்றியத்திற்குட்பட்ட தெங்குமர ஹாடா கிராமத்தில் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியிருந்து வருகின்றனர்.இந்த கிராமம் தமிழகம், கர்நாடகா எல்லை வனப்பகுதியில் அமைந்து உள்ளது. இங்குள்ள மக்கள் அனைவரும் தங்களின் விவ சாய நிலங்களில் வாழை, நெல், மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களை பயிர் செய்து அதன் மூலம் வருமானம் ஈட்டி வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது நிலவும் தட்ப வெப்ப நிலைக் கேற்ற பயிரான வாழையை சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் இப்பகுதி விவசாயிகள் பயிரிட்டு உள்ளனர்.

தட்பவெப்ப நிலை

இந்த பகுதியில் நடவு செய்யப்பட்டு உள்ள வாழைப் பயிர்கள் வரும் டிசம்பர் மாதத்திற்கு அறுவடைக்கு தயா ராகும். அறுவடை செய்யப் படும் வாழைத்தார்களை சத்தி, ஈரோடு உள்ளிட்ட பகுதி களில் உள்ள மொத்த வியாபாரிகள் வாங்கி சென்று வரு கின்றனர்.

இது குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், தெங்கு மரஹாடா கிராமத்தில் சமவெளி பகுதிகளுக்கு ஈடாக தட்பவெப்ப நிலை நிலவி வருவதால் இங்கு நெல், மக்காச் சோளம், வாழை, சூரியகாந்தி உள்ளிட்டவைகளை பயிர் செய்து வருகிறோம்.

யானைகள் அட்டகாசம்

இப்பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களை சுற்றி அடர்ந்த வனப்பகுதிகள் உள்ளதால் உணவு, குடிநீர் தேடி வனத்தை விட்டு காட்டு யானைகள் கூட்டம், கூட்டமாக விவசாய நிலங்களுக்குள் புகுந்து அட்டகாசம் செய்து வருவதுடன் அவ்வப்போது விவசாயிகளையும் கொன்று வருகிறது.

தற்பொழுது தங்கள் நிலங்களில் பெரும்பாலானோர் வாழை பயிரிட்டு உள்ளோம். இது வரும் டிசம்பர் மாதத்திற்குள் அறுவடைக்கு தயாராகிவிடும் என்ற நம்பிக்கையில் உள்ளோம். இந்த ஆண்டு போதிய பருவ மழையும் பெய்யாததால்

பெரும் அவதிக்குள்ளாகி வருகிறோம். எனவே அரசு இப்பகுதி விவசாயிகளின் நலன் கருதி விவசாயம் மேற்கொள்ள மானியத்துடன் கடன் வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஒட்டன்சத்திரம் காய்கறி வியாபாரிகள் போராட்டம் ரூ.2 கோடி மதிப்புள்ள காய்கறிகள் தேக்கம்



ஒட்டன்சத்திரத்தில் காய்கறி வியாபாரிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட போது எடுத்த படம்.

**ஒட்டன்சத்திரம்,**

ஒட்டன்சத்திரம் காய்கனி மார்க்கெட் வியாபாரிகள், தேர்தல் ஆணையம் நியமித்துள்ள பறக்கும் படை வாகன தணிக்கையின் போது பணம் பறிமுதல் செய்யப்படுவதை கண்டித்து நேற்று வேலைநிறுத்த போராட்டம் நடத்தினர். இதனால் மார்க்கெட்டில் சுமார் ரூ.2 கோடி மதிப்பிலான காய்கறிகள் தேக்கம் அடைந்தன.

<u>காய்கறி மார்க்கெட்</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காந்தி காய்கனி மார்க்கெட் தென்தமிழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற மார்க்கெட்டாகும். இந்த மார்கெட்டிற்கு ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்தும், அருகில் உள்ள மாவட்டங்கள் மற்றும் ஆந்திரா, கர்நாடகா, மராட்டியம் ஆகிய மாநிலங்களில் இருந்தும் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள் இங்கு கொண்டு வரப்பட்டு விற்பனை ஆகி வருகிறது. இங்கிருந்து தமிழ்நாட்டின் பல்வேறு

பகுதிகளுக₵கும் அதிகப்படியான காய்கறிகள் கேரள மாநிலத்திற்கு ஏற்றுமதி ஆகிறது.

இதனால் தினந்தோறும் காய்கனிகள் அதிக விலைக₵கு விற்கும் போது சுமார் ரூ.5 கோடி முதல் ரூ.6 கோடி வரை வர்த்தகம் நடைபெற்று வந்தது. தற்போது காய்கறி வரத்து மற்றும் விலை குறைவால் மார்க்கெட்டில் தினமும் சுமார் ரூ.1½ கோடி மதிப்பில் வர்த்தகம் நடைபெற்று வருகிறது. இந்த மார்க்கெட்டிற்கு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அதிகப்படியாக கேரள மாநிலத்தில் இருந்தும் வியாபாரிகள் வருகின்றனர்.

சில வியாபாரிகள் இங்கேயே தங்கி மார்க்கெட்டில் காய்களை வாங்கி லாரிகள் மூலம் தினந்தோறும் கேரள மாநிலத்தில் உள்ள சிறு கடைகளுக₵கு அனுப்பிவைத்து விடுவர். வாரத்தின் கடைசி நாளாள சனிக₵கிழமை அன்று கேரள மாநிலம் மற்றும் பிற பகுதிகளுக₵கு வியாபாரிகள் சென்று வாரம் முழுவதும் அனுப்பிய காய்களுக₵கு மொத்த பில் தொகையை வாங்கிவருவார்கள். பின்னர் அடுத்தநாள் ஞாயிற்றுக₵கிழமை ஒட்டன்சத்திரம் காய்கறி கமிசன் கடைக்காரர்களுக₵கு பணம் கொடுத்து மீண்டும் காய்களை வாங்கி வியாபாரிகள் அனுப்பி வருவது வழக₵கம் ஆகும்.

<u>பறக்கும் படை அதிகாரிகள்</u>

இந்நிலையில் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் விதிமுறைப்படி ரூ.50 ஆயிரத்திற்கு மேல் ஒரு நபர் பணம் கொண்டு செல்லக₵ கூடாது என்ற விதிமுறை இருப்பதால் கேரள மாநிலத்திற்கு சென்று காய்கறிகளுக₵கான பணத்தை ஒட்டன்சத்திரம் வியாபாரிகள் வாங்கி வரும் போது மடத்துக₵குளம் பகுதியில் தேர்தல் அதிகாரிகள் சோதனை செய்து உரிய மார்க்கெட் ரசீதுகள் காட்டியும் வியாபாரிகள் 7 பேரிடம் ரூ.29 லட்சம் வரை பறிமுதல் செய்து விட்டனர்.

போதிய காய்கறிகள் வாங்கியதற்கு உரிய பில் தொகைக₵கான கமிசன் கடை ரசீது கொடுத்தும் பணத்தை திருப்பி தராததால் ஆத்திரமடைந்த வியாபாரிகள் நேற்று ஒட்டன்சத்திரம் கமிசன் கடை சங்க பொறுப்பாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அதனை தொடர்ந்து வியாபாரிகள் மற்றும் கடைஉரிமையாளர்கள்


லாரி டிரைவர்கள், கூலித்தொழிலாளர்கள் உட்பட ஏராளமானோர் அந்த பகுதியில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

<u>காய்கறிகள் தேக்கம்</u>

இதனால் திண்டுக்கல்-பழனி தேசிய நெடுஞ்சாலையில் சுமார் ஒரு மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்த போராட்டம் குறித்து தகவல் கிடைத்து அங்கு வந்த தாசில்தார் விஜயலட்சுமி, போலீஸ் துணை சூப்பிரண்டு ஜானகிராமன் ஆகியோர் அங்கு விரைந்து வந்து பேச்சுவார்த்தை நடத்தி மாவட்ட கலெக்டரிடம் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தனர். அதன்பேரில் மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

அதே நேரத்தில் வியாபாரிகள் விற்பனை செய்து கொண்டு வரும் பணத்திற்கு உரிய அனுமதி அளிக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும் வரை வியாபாரிகள் காய்களை வாங்க மறுத்துள்ளனர். இதனால் மார்க்கெட்டிற்கு விவசாயிகள் கொண்டு வந்த காய்கள் விற்பனை ஆகாமல் தேக்கம் அடைந்துள்ளது. இந்த போராட்டம் எதிரொலியாக, விவசாயிகள், வியாபாரிகள், கூலித்தொழிலாளர்கள் கடுமையாக பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.

**கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டும் வைகை அணைக்கு வரவில்லை**



**ஆண்டிப்பட்டி,**

முல்லைப் பெரியாறு அணையில் இருந்துகூடுத லாக தண்ணீர் திறக்கப் பட்டும் வைகை அணைக்கு நீர்வரத்து ஏற்படாததால் இடைப்பட்ட பகுதிகளில் விவசாயம் தவிர்த்து வேறு யாரேனும் தண்ணீரை திருடுகின்றனரா? என்பது குறித்து அதிகாரிகள் சோதனை நடத்தி வரு கின்றனர்.

கூடுதல் தண்ணீர் திறப்பு

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணை மதுரை மாநகர மக்களின் பிரதான குடிநீர் ஆதாரமாக விளங்கு கிறது. 71 அடி உயரமுள்ள வைகை அணை பருவமழைகள் பொய்த்துவிட்டதால் கடந்த 2 ஆண்டுகளாக நிரம்பவே இல்லை. அணையின் நீர் இருப்பை கருத்தில் கொண்டு மதுரை மற்றும் சேடப்பட்டி கூட்டுக்குடிநீருக்காக வினா டிக்கு 60 கன அடி திறக்கப்பட்ட தண்ணீரை கடந்த ஒரு மாதமாக வினா டிக்கு 40 கனஅடியாகவும் குறைத்து திறந்துவிடப்படு கிறது.

அணையில் இருந்து வெளி யேற்றப்படும் நீரை ஓரளவுக்கு சரிகட்டும் விதமாகவும், விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்காகவும் முல்லைப் பெரியாறு அணையில் இருந்து வினாடிக்கு 100 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. ஆனால் அங்கிருந்து திறக் கப்படும் தண்ணீர் வீரபாண்டி வரை கூடவரவில்லை.

தண்ணீர் வரவில்லை

முல்லைப் பெரியாறு அணையில் இருந்து கடந்த சில நாட்களுக்கு முன்பு வினாடிக்கு 200 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் ஓரளவு தண்ணீர் வைகை அணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பார்ப்பை பொய்யாக்கும் விதமாக தண்ணீர் தேனி அருகே உள்ள பழனிசெட்டிபட்டிக்கே வர வில்லை.

தண்ணீர் வராததாலும், கடும் வெயிலாலும் வைகை அணையின் நீர்மட்டம் 32 அடியாக சரிந்துள்ளது. முல்லைப்பெரியாறு அணையில் திறக்கப்படும் தண்ணீரை விவசாயம் மற்றும் குடிநீர் திட்டங்கள் தவிர்த்து வேறு யாரேனும் திருடு கின்றனரா? என்பது குறித்து அதிகாரிகள் தீவிர சோத னையில் ஈடுபட்டு வரு கின்றனர். நேற்றைய நிலவரப் படி வைகை அணையின் நீர்மட்டம் 32.07 அடியாகவும், அணையில் இருந்து மதுரை, சேடப்பட்டி கூட்டுக்குடிநீர்

தேவைக்காக வினாடிக்கு 40 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. அணைக்கு நீர்வரத்து இல்லை. அணை யின் மொத்த நீர்இருப்பு 458 மில்லியன் கனஅடியாக காணப்பட்டது.

**வனவிலங்குகள் வருவதை தடுக்க அகழி வெட்டும் பணி**



மேற்கு தொடர்ச்சி மலையடிவார பகுதிகளில் வனத்துறை சார்பில் அகழி வெட்டும் பணி நடந்து வருவதை காணலாம்.

ராஜபாளையம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவார பகுதி களில் உள்ள விவ சாய பயிர்களை வனவிலங்கு கள் சேதப்படுத்துவதை தவிர்க்க வனத்துறை சார்பில் அகழி வெட்டும் பணி நடந்து வருகிறது.

<u>வனவிலங்குகள்</u>

ராஜபாளையம் மேற்கு தொடரச்சி மலை பகுதியில் யானை, மிளா, காட்டெருமை, காட்டுப்பன்றி, மான் உள்பட ஏராளமான வன விலங்குகள் உள்ளன. கடந்த சில ஆண்டு களாக போதிய மழை இல்லாத காரணத்தால், உணவுக்காகவும் நீருக்காகவும் யானை, காட் டெருமை மற்றும் மான் உட் பட பல விலங்கு கள் மலையடி வாரத்தில் உள்ள விவசாய நிலங்களுக்கு வரத் தொடங் கின.

இதனால் சுமார் 40 கி.மீ. தொலைவு உள்ள மலையடி வார பகுதிகளில் பயிரிடப்படும் தென்னை, மா, வாழை, காய் கறி பயிர்கள், நெல் உட்பட ஏராளமான பயிர்களை வன விலங்குகள் நாசம் செய்வது தொடர் கதையாக இருந்து வந் தது. போதிய மழை இல்லாத நிலையில் கடும் சிரமத்திற்கு இடையில்

வளர்க்கப்படும் பயிர்களை வனவிலங்குகள் நாசம் செய்வதால் பலர் தங்கள் நிலத்தை தரிசாகவே விட்டு விட்டனர்.

வனவிலங்குகளிடமிருந்து பயிர்களை காப்பாற்றக்கோரி வனத்துறையினரிடம் தெரி வித்த போது, மின்சார வேலி வனத்துறை சார்பில் அமைத்து கொடுக்கப்பட்டது. எனினும் இந்த முயற்சி பெரிய அளவில் பலன் தராததால் பல விவசா யிகள் வன விலங்குகள் நட மாட்டத்தால் அச்சம் கொண் டிருந்தனர். இந்நிலையில் தற்போது வனத்துறை சார்¢பில் மலையடி வார பகுதிகளில் அகழி வெட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

<u>அகழி</u>

புல்லுபத்தி பீட் பகுதியில் நிலப்பாறை முதல் இடையன் ஊரணி வரை 5 கி.மீ. தூரமும், நாவுலூத்து பீட் பகுதியில் வரட்டுவடை முதல் உடும்பு பாறை வரை 2½ கி.மீ வரை யிலும் அகழி வெட்டும் பணி கள் ரூ. 30 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. எந்திரங்கள் மூலம் 6 அடி ஆழமும், 6 அடி அகலத்திலும் பெரிய அளவில் தோண்டப் பட்டு வரும் அகழியால் உருவத்தில் பெரிய தாக காணப்படும், யானை மற்றும் காட்டெருமை போன்ற விலங் குகள் கூட இதை தாண்டி வரமுடியாது.

<u>மகிழ்ச்சி</u>

மேலும் வரும் ஆண்டிற்குள் மீதமுள்ள தூரமும் அகழிகள் வெட்டப்பட்டு, வனவிலங்கு களால் விவசாயிகள் பாதிக்கப் படாமல் இருக்க ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் வனத் துறையினர் தெரிவித்தனர்.

தற்போது அகழி வெட்டும் பணியால் மலையடிவாரத்தில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக் கரில் விவசாயம் செய்யும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

அகழி வெட்டும் பணிகள் முழுமை யாக முடியும் பட்சத்தில் இனி வன விலங்குகளினால் பாதிப்பு இருக்காது என நம்பிக்கையுடன் காத்திருக் கின்றனர்.

**நாகர்கோவிலில் முருங்கைக்காய் விலை வீழ்ச்சி**



**நாகர்கோவில்,**

குமரி மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்துக்கு முன்புவரை முருங்கைக்காய்க்கு கடும் தட்டுப்பாடு நிலவியது. இதனால் அவற்றின் விலையும் கடுமையாக இருந்தது. இதனால் வேறு வழியின்றி ஒரு கிலோ முருங்கைக்காயை ரூ.120 வரை விலை கொடுத்து மக்கள் வாங்கினர். தரமான ஒரு காய் ரூ.15 வரை விற்றது. இந்த விலையேற்றத்தால் மக்கள் முருங்கைக்காயை சமையலறை பக்கம் அறவே தவிர்த்தனர். முருங்கைக்காய் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டதே இந்த விலையேற்றத்துக்கு காரணம்.

இந்நிலையில் தற்போது முருங்கைக்காய் அதிக அளவில் வரத்தொடங்கியுள்ளது. இதனால் அதன் விலையும் கடுமையான சரிவை கண்டுள்ளது. நாகர்கோவிலில் நேற்று தரமான முருங்கைக்காய் ஒன்று 2 ரூபாய்க்கு விற்றது. சிறிய முருங்கைக்காயை 1 ரூபாய்க்குக்கூட வாங்க முடிந்தது. வடசேரி சந்தையில் ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.20 முதல் ரூ.25 வரை தரத்துக்கு ஏற்ப விற்பனை ஆயின.

இந்த விலை குறைவால் முருங்கைக்காயை சுவைப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.